# வலயக் கல்வி அலுவலகம் - கிளிநொச்சி

## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2020

| தரம் :06 | புவியியல் | நேரம் : 2.00 மணி |
|---|---|---|
| | சுட்டெண் ........................................................................ | |

### பகுதி I

**சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

1) உமது பாடசாலை அமைந்துள்ள மாகாணம் எது?
   1) வடமாகாணம் 2) மத்திய மாகாணம்
   3) கிழக்கு மாகாணம் 4) மேல் மாகாணம்

2) குறிப்பிட்டதோர் பிரதேசத்தில் குறுகிய காலத்தில் நிலவும் வளிமண்டல நிலைமைகள் எவ்வாறு அழைக்கப்படும்?
   1) காலநிலை 2) வானிலை
   3) வெப்பநிலை 4) வானிலை மூலகங்கள்

3) நெல் வயல்களை நாசம் செய்யும் பூச்சியினங்களை அழிக்கும் விலங்கினம் எது?
   1) காகம் 2) மண்புழு 3) வெளவால் 4) தும்பி

4) மலைப்பாங்கான பிரதேசங்களில் பெருமளவில் மேற்கொள்ளப்படும் பயிரினங்களில் ஒன்று,
   1) தெங்கு 2) நெல் 3) தேயிலை 4) கறுவா

5) பின்வருவனவற்றில் இலங்கை அமைந்துள்ள சமுத்திரம் எது?
   1) இந்து சமுத்திரம் 2) பசுபிக் சமுத்திரம் 3) ஆசியா 4) அத்திலாந்திக்

**மிகப்பொருத்தமான சொல்லை இடைவெளியில் எழுதுக.**

6) திட்டப்படம் ஒன்றினை வரையும்போது ........................................ குறிப்பிடப்பட வேண்டும்.

7) வானிலை மூலகங்களில் பிரதானமானது ........................................ ஆகும்.

8) பிரம்பு உற்பத்திக்கு பிரசித்தி பெற்ற இடமாக ........................................ உள்ளது.

9) வளி மாசடைவதனால் ........................................ ஏற்படுகின்றது.

10) இலங்கையில் ................................ பிரதான நிர்வாக நகரமாகக் காணப்படுகிறது.

(ரதாவடுன்ன, திசை, ஸ்ரீ ஜெயவர்த்தனபுர, வெப்பநிலை, அமில மழை, மழைவீழ்ச்சி)

**பொருத்தமானவற்றை இணைக்குக.**

| | |
|---|---|
| 11) சக்தி சிக்கனம் | காவியுடைக்கள்ளி |
| 12) வானிலை மூலகம் | திருகோணமலை |
| 13) கரையோர நிலத்தோற்றம் | மண்ணரிப்பு |
| 14) இடம்பெயர் பறவை | புளொ ஒளிர்வு விளக்கு |
| 15) முறையற்ற நிலப்பயன்பாடு | காற்று |



kalvi.lk

**சரியாயின் (✓ ) எனவும் பிழையாயின் ( × ) எனவும் அடையாளமிடுக.**

16. காற்றின் வேகம் காற்றுத் திசைகாட்டி மூலம் கணிக்கப்படும். ( )

17. எமது நாட்டில் நிர்வாகப் மிகப்பெரிய பிரிவு மாகாணம் ஆகும். ( )

18. செண்பகம் பயிர்களை நாசம் செய்யும் நத்தைகளை அழிக்கிறது. ( )

19. ஆற்றுப் பள்ளத்தாக்குகளில் தெங்குச் செய்கை அதிகமாக இடம் பெறுகிறது. ( )

20. அனுராதபுரம் புராதன நீர்வள நாகரிகத்தின் மத்திய நிலையமாகும். ( )

(20x2 = 40 புள்ளிகள்)

**பகுதி II**

**முதலாம் வினா உட்பட மொத்தமாக 5 வினாக்களுக்கு விடை எழுதுக.**

01) பின்வரும் இடங்களை இலங்கைப் புறவுருவப் படத்தில் குறித்துப் பெயரிடுக.

I) கிளிநொச்சி
ii) கொழும்பு
iii) திருகோணமலை
iv) தென் மாகாணம்
v) யாழ்ப்பாணம்
vi) மன்னார்

(6x2 = 12 புள்ளிகள்)

02) 1. உமது பாடசாலை பற்றிய பின்வரும் விடயங்களை குறிப்பிடுக.
i) கிராம உத்தியோகத்தர் பிரிவு -
ii) பிரதேச செயலாளர் பிரிவு -
iii) மாவட்டம் -

2. "இன்று மு.ப 7.00 மணியுடன் முடிவடைந்த 24 மணித்தியாலத்திற்குள் 220 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழைவீழ்ச்சி கொழும்பிலும், $30^{o}c$ உயர் வெப்பநிலை திருகோணமலையிலும் பதிவாகியது. தென்மேற்கு திசையிலிருந்து காற்று பலமாக வீசுவதனால் மத்திய மலைநாட்டின் மேற்குப் பகுதியில் கடுமையான மழைவீழ்ச்சி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது"
இந்த வானிலை அறிக்கையில் கூறப்பட்ட வானிலை மூலகங்கள் இரண்டைக் குறிப்பிட்டு, அதனை அளவிட பயன்படும் கருவிகளையும் பெயரிடுக.

3. பாடசாலை அயற்சூழலில் அவதானிக்கக்கூடிய புவியியல் அம்சங்கள் 5 ஐ குறிப்பிடுக.

(3+4+5 = 12 புள்ளிகள்)

03) 1. சூழலில் நன்மைகளை ஏற்படுத்தும் விலங்கினங்கள் 3 ஐ தருக.
2. தாவரங்களின் பயன்கள் 4 ஐ குறிப்பிடுக?
3. சூழலில் நீர் வளத்தை பாதுகாக்கக்கூடிய வழிகள் 5 ஐ கூறுக.

(3+4+5 = 12 புள்ளிகள்)

04) 1. நிலத்தைப் பயன்படுத்தும் முறைகள் 3 ஐ எழுதுக.
2. நிலத்தை முறையாகப் பயன்படுத்த செய்ய வேண்டியவை 2 ஐ தருக.
3. முறையற்ற நிலப் பயன்பாட்டினால் ஏற்படும் பாதிப்புக்கள் 5 ஐக் குறிப்பிடுக.

(3+4+5 = 12 புள்ளிகள்)



kalvi.lk

05) 1. கழிவுகளை எவ்வாறு வகைப்படுத்தலாம்?
2. கழிவுகளை மீள் சுழற்சி செய்தல் என்றால் என்ன?
3. கழிவுப் பொருட்களை பயன்படுத்தி செய்யக்கூடிய ஆக்கங்கள் 5 தருக?

(3+4+5 = 12 புள்ளிகள்)

06) 1. இலங்கைத் தீவு அமைந்துள்ள கண்டம், சமுத்திரம் என்பவற்றைக் குறிப்பிடுக.
2. உலகிலுள்ள தீவுகள் 4 ஐ பெயரிடுக.
3. இலங்கையின் அமைவிடத்தினால் கிடைக்கும் நன்மைகள் 2 ஐ குறிப்பிடுக.

(3+4+5 = 12 புள்ளிகள்)

07) 1. உமது பாடசாலை அயற் சூழலில் மேற்கொள்ளப்படும் விவசாய நடவடிக்கைகள் 3 ஐ தருக?
2. உமது பிரதேசத்தில் கிடைக்கும் சேவைகள் 4 ஐ எழுதுக?
3. பின்வரும் கைத்தொழில்களுக்கு பிரசித்தி பெற்ற இடங்களை குறிப்பிடுக.

i) மரத்தளபாடம்

ii) முகமூடிகள்

(3+4+5 = 12 புள்ளிகள்))



Education கல்வி අධ්‍යාපන
kalvi.lk





kalvi.lk

# தரம் 6,7,8

# தமிழ்

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் தமிழ் பாட வகுப்புகள்.

- ✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
- ✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
- ✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

**மாதக் கட்டணம்**

**850/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

**தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.**



கல்வி

Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page